International Journal of Applied Research 2019; 5(12): 83-91




**ISSN Print:** 2394-7500
**ISSN Online:** 2394-5869
**Impact Factor:** 5.2
IJAR 2019; 5(12): 83-91
www.allresearchjournal.com
Received: 07-10-2019
Accepted: 09-11-2019

**முனைவர் இரா.விமலாதேவி**
உதவிப் பேராசிரியர்,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை

**Correspondence Author:**
**முனைவர் இரா.விமலாதேவி**
உதவிப் பேராசிரியர்,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை

# தமிழியல் ஆய்வு அறிஞர் டாக்டர் மா.இராசமாணிக்கனார்

**முனைவர் இரா.விமலாதேவி**

இராசமாணிக்கனார் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம், கோயிற்கலைகள், கல்வெட்டு, புதினம், சிறுவர் இலக்கியம், வாழ்க்கை வரலாறு என்று பல்வேறு துறைகளில் நூல்களைப் படைத்து சிறந்த சிந்தனையாளராகவும் ஆராய்ச்சி வல்லுநராகவும் திகழ்ந்தார். நெடிய ஆய்வுகளுக்குப் பின் *1944* இல் இவரால் எழுதப்பெற்ற பல்லவர் வரலாறு' தமிழ்நாட்டு வரலாற்றுக் களத்தின் திருப்புனையாகும். சங்க இலக்கியங்கள் தொடர்பாக ஆய்வு செய்பவர்களுக்கு இராசமாணிக்கனாரின் தமிழ் மொழி இலக்கிய வரலாறு' 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' மிக முக்கிய ஆவணமாகும். பெரியபுராணத்தை வரலாற்று நூலாகவும் அதை யாத்த சேக்கிழார் பெருமானை வரலாற்று ஆராய்ச்சி வித்தகராகவும் நிலைநிறுத்திய பெருமைக்குரிய ஆய்வாளர் இவர். சங்க காலம் முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் இயங்கிய சோழ மரபின் வேர்களையும் விழுதுகளையும் ஒரு சேரக் கண்டு மூன்று தொகுதிகளில் சோழர் வரலாறாக்கித் தந்த இப்பெருந்தகையின் முயற்சியை மறைந்த வரலாற்றறிஞர்கள் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரும் ஹூராஸ் பாதிரியாரும் உவந்து பாராட்டியுள்ளனர்.

ஆய்வு என்பது நுட்பத்துடன் கிடைக்கும் தரவுகளை ஒப்பிட்டும், வேறுபடுத்தியும் ஆராய வேண்டிய பணி. இவ்வகையில் இராசமாணிக்கனாரின் ஆய்வு நுட்பத்தை இக்கட்டுரை வழி ஆராயலாம்.

## பத்துப்பாட்டு ஆராய்ச்சி

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராயிருந்த டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளையவர்கள் *1959* ஆம் ஆண்டின் இறுதியில் இராசமாணிக்கனார் தென்னிந்திய வரலாற்றிலும் கல்வெட்டுக்களிலும் பயிற்சி பெற்றிருத்தலால் சங்க நூலைப்பற்றி ஆராய்ச்சி நூல் ஒன்று எழுத வேண்டும் என்று பணித்தார்கள். பல்கலைக்கழக அனுமதியுடன் அத்திட்டம் தொடங்கப்பட்டது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இத்தரவுகளின் உண்மைத் தன்மையை நிறுவுவது எளிதான செயலன்று இதை நன்கு உணர்ந்திருந்த இராசமாணிக்கானார் ஆற்றுப்படுத்தியவர்கள் கூறிய வழிகளில் அமைந்திருந்த ஊர்களை முதலில் அடையாளப்படுத்தி அவ்வூர்களில் உள்ள திருக் கோயில்களைக் கண்டறிந்து அங்குள்ள கல்வெட்டுக்களைக் படித்து அவற்றின் வழி அவ்வூர்கள் ஆற்றுப்படை சுட்டும் ஊர்களே என்பதை உறுதி செய்து கொண்டு தம் ஆய்வைத் தொடர்ந்துள்ளார்.

ஆராய்ச்சிப் பேரறிஞரான நாவலர். டாக்டர் ச.சோமசுந்தர பாரதியார் அவர்கள் பொருநர் ஆற்றுப்படைக்குரிய கரிகாலன் வேறு*;* பட்டினப்பாலைக்கு உரிய திருமாளவன் வேறு என்று ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதியுள்ளார். [1]

அவர்கள் கருத்தை இராசமாணிக்கனார் தம் ஆய்வு வழி மறுத்துள்ளார். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களே பழைய சோழநாடு. அந்நாட்டை ஆண்டவர் சோழர். அங்ஙனம் இருக்க மிக்க வடக்கிலுள்ள கடப்பை, கர்நூல் மாவட்டங்களை ஆண்டவர் தம்மைச் சோழர் என்றும் கரிகாலன் மரபினர்' என்றும் கூறிக்கொண்டனர் என்பது எங்ஙனம் பொருந்தும்*?* ஏறத்தாழக் கி.பி.*300*-இல் தொண்டை நாடு பல்லவர் ஆட்சிக் உட்பட்டது. அதற்குப்பின்பு சோழர் பல்லவரை வென்று ரேநாண்டில் குடியேறினர் என்று கூறுதறுக்குச் சான்றில்லை. ஏறத்தாழக் கி.பி*300*-க்கு முற்பட்ட சங்ககாலத்தில் தொண்டை நாடு முடியப் பெரு நிலப்பரப்பை வென்றவன் கரிகாலன் ஒருவனே என்று பட்டினப்பாலை கூறுகின்றது. அது கூறுவதற்கு ஏற்பவே ரேநாண்டு மன்னர் தம்மைக் கரிகாலன் மரபினர் எனக் கூறிச் சென்றனர். அவர்கள் கூற்றுக்கு ஏற்பவே அந்நாட்டை பார்வையிட்ட சீன வழிப் போக்கனும் அந்நாட்டைப் சூளியே என்று கூறியுள்ளான். சூளியே என்பது சோழியர் -சோழா என்வற்றின்

திரிபாகும். இவை அனைத்தையும் நோக்க தொண்டை மண்டலம் முடியத் தன் ஆட்சியை நிலை நிறுத்திய கரிகாலன் தெலுங்கு நாட்டின் ஒரு பகுதியான ரேநாண்டில் சோழ அரச மரபினரைக் குடியேற்றி ஆளச்செய்தான் என்பதே பொருத்தமாகும். எனவே ஆற்றுப்படைக்குரிய கரிகாலனும் பல பட்டினப்பாலைக்கு உரிய திருமாவளவனும் ஒருவரே என நிறுவுகிறார்.

பல்லவர் வரலாறு

இந்நூலில் *700* ஆண்டுகள் தென்னிந்தியாவில் ஆட்சி புரிந்த பல்லவர்கள் யார்*?* எங்கிருந்து வந்தவர்கள்*?* போன்ற கேள்விகளுக்கு பட்டயங்கள், கல்வெட்டுகள், மேனாட்டு ஆராய்ச்சியாளர்களின் குறிப்பு, வரலாற்று நூலாசிரியர் கூறும் கருத்துக்கள் வழி ஆராய்ந்து பல்லவர் பற்றிய தெளிவான முடிவுக்கு வந்துள்ளார்.

இந்திய வரலாற்று ஆசிரியரான வின்ஸென்ட் ஸ்மித் என்பார், தமது 'பழைய இந்திய வரலாறு' என்னும் நூலில் பல்லவர் என்பவர் தென் இந்தியரே ஆவர் என்று முடிவு கூறியுள்ளார்.[2]

இலங்கையின் சிறந்த ஆராய்ச்சியாளராகிய இராசநாயகம் என்பவர் பல்லவர் யாழ்ப்பாணத்திலிருந்து போந்தவர் ஆதலின் தம்மைப் போந்தர் என்றும் பல்லவர் என்றும் பல்லவ அரசர் என்றும் கூறிக்கொண்டனர் எனக் கூறியுள்ளார்.

ஆராய்ச்சியாளராகிய எலியட் செவேல் முதலியோர் தொண்டை மண்டலத்துப் பழங்குடியினரான குறும்பர் மரபினரே பிற்காலப் பல்லவர் என முடிவு செய்தனர். என்பதை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு பல்லவர் தம்மை பாரத்வாச கோத்தினர் வகை என்று கூறுதல் கட்டுக்கதை. இவர்கள் சத்திரியரே. இவர்கள் பல்லவ சத்திரியர் என்று கூறியதாகத் தாளகுண்டாக் கல்வெட்டு கூறுகிறது. எனவே பல்லவர் சத்திரியர் ஆவர். அவர்கள் வாகாடகர், சாலங்காயனார் முதலிய அரச மரபினரோடு தொடர்பு கொண்டனர். தமிழ் வேந்தர் ஆரி, வேம்பு, பனை இவற்றை தம் மரபுக்கு அடையாளமாகக் கொண்டவாறே ஆந்திர நாட்டிலிருந்து வந்த பல்லவரும் தமிழ் முறை பற்றித் தம்மை (பல்லவக்கொடி - தொண்டைக்கொடி) பல்லவர் என அழைத்துக்கொண்டனர்.

காடவன், காடவர்கோன், காடுவெட்டி என்பன பல்லவர்க்குப் பிற்காலத்தில் வந்த பெயர்கள் கிபி *8*-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே பல்லவர் கல்வெட்டுகளிலும் இன வேற்றரசர் கல்வெட்டுக்களிலும் வருவதால் இப்பட்டங்கள் தமிழ்மக்களால் இடப்பட்டதாதல் வேண்டும். பல்லவர் காடுகளை அழித்து நாடாக்கினமை இதனால் புலனாகிறது.

தமிழர் திருமணத்தில் தாலி

*1954* ஆம் ஆண்டு மதுரை திருவள்ளுவர் கழகத்தில்

தென்னிந்திய வரலாறும் தமிழிலக்கியமும்’ பற்றி இராசமணிக்கனார் ஆற்றிய சொற்பொழிவில் சங்ககாலம் முதல் கிபி *10*ஆம் நூற்றாண்டு வரையில் தமிழர் திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இருந்தமைக்குச் சான்றில்லை என்றும், பின்னரே மங்கல நாணும் தாலியும் வந்தன என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன எனக் கூறினார் இதற்கு தமிழரசுக் கட்சித் தலைவரான ம.பொ.சிவஞானம் அவர்கள் இச்செய்தி உண்மைக்கு மாறானது என தினத்தந்தியில் கட்டுரை எழுதினார். தென்றல் ஆசிரியர் கண்ணதாசன் இராசமாணிக்கனாரை ஆதரிக்க என ஏற்பட்ட கருத்துப்போரின் விளைவாக வெளிப்பட்டதே தமிழர் திருமணத்தில் தாலி என்னும் நூல்.

இந்நூலில் அகநானூறு தொடங்கி இலக்கியங்களில் கால நிரல் படி மணவிழா இடம் பெறும் செய்திகளைச் சுட்டி மங்கல அணி, அருங்கல அணி, ஈகை அரிய இழை, சின்மணித்தாலி, மாணிக்கத்தாலி எனப் பாடல்களில் பயின்று வரும் தாலி எனப் பொருள் கொள்ளப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் ஆராய்ந்து அச்சொற்கள் மங்கலநாணைக் குறிக்கவில்லை என மெய்ப்பித்து கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை தமிழர் திருமணத்தின்போது மணமகன், மணமகள் கழுத்தில் மங்கல நாணோ அல்லது தாலி கோத்த மங்கல நாணோ கட்டும் வழக்கம் இருந்ததில்லை என்பதை உறுதிபடக் கூறியுள்ளார். ஞால்-தொங்குதல் என்று பொருள்படும். ஞால் என்பதன் திரிபாகிய தால்’ என்பதும் தொங்குதல் என்ற அப்பொருளையே உணர்த்துவதாக வேண்டும். தால்+இ=தாலி - தொங்குதல்.

எனவே, தாலி’ என்பது தொங்கும் நகை’ என்னும் ஒன்றைக் குறிக்குமேயன்றி, அவ்வணி கோக்கப்பெற்ற நூலையோ அல்லது சரட்டையோ அல்லது தனியொரு பொருளையோ குறிக்காது. தால் என்பது தொங்கும் ஒரு பொருள். தொங்கும் அப்பொருளின் வடிவிற்கேற்ப அந்தத் தாலி அடைமொழி சேர்த்து ஐம்படைத் தாலி என்பது அடை மொழியேயன்றி மங்கல நாணில் கோக்கப்பெற்றுத் தொங்கும் அணிவிசேடத்தைக் காரண இடுகுறியாய் நின்று குறிப்பதாயிற்று. கழுத்து நாணில் தொங்கவிடும் அணிகள் பலவற்றிக்கும் தாலி (தொங்குவது) என்னும் காரணப்பெயர் உரியதாயினும், இந்நாளில் அப்பெயர் (தாலி) மங்கல நாணில் கோத்துத் தொங்கவிடப்படும் மணவணியையே குறிக்கலாயிற்று என்று கொள்ளுதல் பொருத்தமாகும். தமிழிலக்கிய ஆய்வு வரலாற்றில் தாலி பற்றிய இவ்வாய்வு அவருக்கு தனித்ததோர் இடத்தைப் பெற்றுத்தந்தது.

பெரிய புராண ஆராய்ச்சி

சேக்கிழாரின் காலத்தை அறிய அவர் குறிப்பிடும் குலோத்துங்கனின்

காலத்தை அறிய வேண்டியது அவசியம்.

பெரிய புராணத்தில் சேக்கிழார் தம் காலத்து மன்னரின் பெயரைக் குலோத்துங்கர் எனக் குறிப்பதால், அவர், குலோத்துங்கர் என்ற சோழ மன்னர் காலத்தில் வாழ்ந்தவர் என்பதில் அறிஞர்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லை. சோழர் வரலாற்றில் மூன்று குலோத்துங்கர்கள் இருந்தனர். முதற் குலோத்துங்கர் கி.பி.*1070*- கிபி.*1120* வரை அரசாண்டவர். இரண்டாம் குலோத்துங்கர் கிபி *1133*- *1150*-வரை ஆட்சியிலிருந்தார். மூன்றாம் குலோத்துங்கர் கி.பி. *1178* இல் அரியணையேறி கி.பி. *1218* வரை ஆட்சி நடத்தியவர். இம்மூவருள் சேக்கிழார் குறிப்பிடும் குலோத்துங்கர், 'அநபாயன்' எனும் பட்டப் பெயரை உடையவர்.

பெரியபுராணத்தில் இப்பெயர் பத்து இடங்களில் இடம் பெற்றுள்ளது. இப்பெயரை உடையவராகக் கல்வெட்டுகளில் சுட்டப்படும் குலோத்துங்கர் இரண்டாம் குலோத்துங்கரே. மூன்றாம் குலோத்துங்கருக்கு இவ்விருதுப்பெயர் இருந்தைக்குக் கல்வெட்டுச் சான்றேதும் கிடைத்திலது. பெரியபுராணம் போலவே மூவருலாவிலும் இரண்டாம் குலோத்துங்கர். 'அநபாயன்' எனும் பெயரால் மூன்றிடங்களில் விளிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டும் இராசமாணிக்கனார் இந்த ஒரு சான்றுடன் நிறைவுகொள்ளாமல், 'மூன்றாம் குலேத்துங்கரே சேக்கிழார் கால வேந்தர்' என்று உரைத்திருந்தார் கூற்றிற்கான காரணங்களை விரிவாக ஆராய்ந்து ஒவ்வொன்றாகத் தக்க சான்றுகளின் அடிப்படையில் மறுத்திருக்கிறார்.

'அநபாயன்' இரண்டாம் குலோத்துங்கரே என்பதை மேலும் உறுதிபட நிறுவுவதற்காக, அநபாயன் பற்றிய இலக்கிய, கல்வெட்டுச் செய்திகளை ஒவ்வொன்றாக ஒப்பிட்டுக்காட்டி, ஏறத்தாழ ஆறு நிலைகளில் தம் முடிவு சரியானதே என்பதைக் தெளிவுபட நிறுவியுள்ளார். இதனால் சேக்கிழார் வாழ்ந்த காலம் இரண்டாம் குலோத்துங்கன் காலமேயாகும்.

சோழர் வரலாறு

இராசாதிராசனுக்கு இவன் தம்பியாவன். இவன் கி.பி. *1178* -இல் தன் *18*-ஆம் வயதில் பட்டத்தைப்பெற்றான்: தமையனுடன் இருந்து அரசியல் அமைப்பை நன்கு அறிந்திருந்தவன் ஆதலாலும், சிறுவயதில் அரசமாதேவியார் பக்கத்தில் இருந்து வளர்ந்தமையாலும் நாட்டின் நிலையையும் அரச மரபின் வரலாற்றையும் நன்கறிந்தவன்.

கி.பி. *1202*-க்குச் சிறிது முன் குலோத்துங்கன் மதுரையில் வீராபிடேகமும் விசயாபிடேகமும் செய்து கொண்டதாக இவனுடைய *26*-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்

குறிக்கிறது. இதன் விவரம் குடுமியான் மலைக்கல்வெட்டில் விளக்கப்பட்டுள்ளது.

குலோத்துங்கனால் சிறப்புப்பெற்ற விக்கிரம பாண்டியன் மகனான ஜடாவர்மன் குலசேகரபாண்டியன் பாண்டி நாட்டைக் கி.பி.*1190* முதல் ஆண்டு வந்தான். இவன் சில ஆண்டுகளுக்குள் செருக்குற்றுச் சோழற்கு அடங்காமல் (தன் மனம் போனவாறு) நாட்டை ஆண்டுவந்தான்; குலோத்துங்கற்கு மாறான செயல்களையும் செய்து வந்தான். அவனுடைய மெயப்புகழ்கள்அவன் வெறுப்புற்ற மனப்பான்மையை நன்கு உணர்த்துகின்றன.

குலசேகரன் செய்துவந்த துரோகச் செயல்கள் சோழற்கு எட்டின. அவன் அரும்பாடுபட்டு அமைதி நிலவச் செய்த பாண்டிநாடு குலசேகரன் ஆட்சியால் பாழாவதை அறிந்து சீற்றங்கொண்டான்; அவனைத் துரத்திவிட்டுப் பாண்டிய நாட்டைச் சோழர் அரசியற் பார்வையில் வைத்தலே நேர்மையானது எனத் துணிந்தான். உடனே பெரும் படையுடன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். உடனே மட்டியூர், கழிக்கோட்டை என்ற இடங்களிற் கடும்போர் நடந்தது. குலசேகரன் படை அழிந்தது. அவன் காடுகளில் புகுந்து மறைந்து வாழ்ந்தான். உடனே சோழப்படை மதுரையைக் கைப்பற்றியது; அரண்மனை உள்ளே இருந்த முடிசூட்டு மண்டபம் முதலியவற்றை இடித்து அழித்து, அவ்விடங்களைக் கழுதை ஏர்கொண்டு உழுது வரகு விதைத்துப் பாழ்படுத்தி விட்டது; இங்ஙனம் மதுரை பாழானது. குலோத்துங்கன் சீற்றமும் தணிந்தது. இப்பெருமகன் மதுரையில் 'சோழ பாண்டியன்' என்ற பட்டமும், வீரமா முடியும் தரித்து வெற்றித்தூண் நாட்டினான்; இங்ஙனம் பாண்டியனையும் சேரனையும் வென்றமையால் திரிபுவன வீரன் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். இப்போருக்குப் பின்னர்ப் பாண்டி மண்டலம் 'சோழபாண்டி மண்டலம்' எனப்பெயர் பெற்றது: சோழரது நேர் ஆட்சியில் அடங்கி விட்டது: மதுரை 'முடித்தலைகொண்ட சோழபுரம்' எனப்பட்டது: மதுரை அத்தாணி மண்டபம் 'சேர பாண்டியர் தம்பிரான்' எனப்பெயர் பெற்றது. இங்ஙனம் பெருவெற்றி பெற்ற குலோத்துங்கன் மதுரையில் விசய அபிடேகமும் வீர அபிடேகமும் செய்து கொண்டான் என்று அவன் புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் கூறுகின்றன குலோத்துங்கன் கொண்ட இப்பெரு வெற்றி கி.பி. *1201*-இல் நடந்து. இவனது *24*-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் இவன் 'திரிபுவன வீரதேவன்' எனக் கூறப்பட்டுள்ளதால் அறியலாம்.

கோயிலாய்வும் கல்வெட்டாய்வும்

கோயில்கள் வரலாற்றுக் களங்கள் என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடையவர் இராசமாணிக்கனார். 'சோழர் வரலாறு' என்னும் நூலில் வரலாறு எழுதுவதற்கான

முதன்மைச் சான்றுகளுள் ஒன்றாய்க் கோயில்களைக் குறித்துள்ளார். வரலாற்று நோக்கிலமைந்த அவருடைய ஆய்வு நூல்கள் அனைத்திலும் அவ்வவ் வரலாற்றிற்குரிய கோயில்களைப் பார்வையிட்டமை, அங்குப் படித்த கல்வெட்டுகளைப் பற்றிய செய்திகள், அங்குள்ள கட்டட அமைப்புகளை, சிற்பங்களை ஆராய்ந்து பெற்ற தரவுகள் இவை தவறாமல் இடம்பெற்றிருக்கக் காணலாம். கோபுரம், விமானம், மண்டபம், தூண், தோரணம் என ஒரு கோயில் சார்ந்த முதன்மையான கட்டட அமைப்புகள் அனைத்தையும் ஆரய்ந்து அவை வரலாற்றுப் போக்கில் பெற்ற மாறுதல்களையும் குறித்துள்ளார்.

'தென்னாட்டுக் கட்டடக்கலை தமிழகத்திற்கே உரியது' எனும்கோட்பாடுடைய இவர். காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், ஏகாம்பரநாதர் கோயில், விழுப்புரம் - புதுச்சேரிப் பெருவழியிலுள்ள திரிபுவனைக் கோயில், திருஆண்டார் கோயில் இவற்றைப் பற்றி விரிவான கட்டுரைகள் எழுதியுள்ளார். திண்டிவனத்திற்கு அருகிலுள்ள திருவக்கரைக் கோயில் பற்றிய இவரது கட்டுரை 'எல்லோரும் வாழ வேண்டும்' என்னும் நூலில் வெளியாகியுள்ளது. இவற்றுள் திரிபுவனைக் கோயிலும் திருஆண்டார் கோயிலும் *1-6-1941* இல் புதுவைக் கல்விக் கழகத்து நண்பர்கள் துணையுடன் ஆராயப்பட்டன. திரிபுவனைக் கோயில் ஆய்வில், மதிற் சுவரெடுத்த வேலையாட்களின் அறியாமையால் கல்வெட்டுப் பகுதிகள் பல, வைப்பு முறையினின்றும் நீங்கிக் கண்டவாறு கண்ட இடங்களில் வைத்துக் கட்டப்பட்டுள்ளமை கல்வெட்டறிஞர் உள்ளத்தைக் கலக்குவதாகும். இப்பழங் கோவிலைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கற்கள் கோவிலுக்கு அண்மையில் இன்றும் சிதறிக் கிடக்கின்றன என்று கோயில் அன்றிருந்த நிலைமையைத் துன்பத்தோடு பகிர்ந்து கொள்ளும் இவர், அக்கோயிலின் மண்டபப் படிகளில் தாம் கண்ட சிற்பங்களின் செழுமை பற்றியும் பதிவு செய்துள்ளார்.

கல்வெட்டுப் புலமை

கோயில்களை வரலாற்றுக் களங்களாகக் கருதியபோதும், கோயில் சார்ந்த கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றில் அடிப்படைத் தெளிவு பெற்றிருந்தபோதும், கோயில் வளாகத்தில் இராசமாணிக்கனாரைப் பெரிதும் கவர்ந்தவை கல்வெட்டுகளே. ஒரு நாட்டின் வரலாற்றை ஐயத்திற்கிடமின்றி எழுதுவதற்கு, எடுத்துச் சொல்வதற்குக் தகுதி வாய்ந்த முதன்மைச் சான்றுகளாக அவர் கல்வெட்டுகளையே நம்பினார். கல்வெட்டுப் பாடங்களில் கிடைத்த அரசர்களின் மெய்க்கீர்த்திகளையும் தந்துள்ளார். முதல் இராஜாதி ராஜன்,

முதற் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் இவர்தம் மெய்க்கீர்த்திகள், அவை எந்த ஆட்சியாண்டின் என்ற குறிப்புடன் இவர் கட்டுரையில் பதிவாகியுள்ளன. இத்தனை சோழ அரசர்களின் மெய்க்கீர்த்திகள் ஒருசேர ஒரே கட்டுரையின் வாயிலாகத் தமிழில் மக்கள் பார்வைக்குத் தரப்பட்டமை தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவே முதல்முறை எனலாம். இதனால், கல்வெட்டு ஆர்வலர்கள் தாங்கள் கேயில்களில் படிக்க நேர்ந்த கல்வெட்டுகள் எந்தச் சோழ மன்னருக்குரியவை என்பதை எளிதாகக் கண்டறியும் வாய்ப்பமைந்தது. இக்கோயில் கல்வெட்டுகளின் பிழிவைக் கல்வெட்டு எண், கல்வெட்டுள்ள இடம், அரசன் பெயர், ஆட்சியாண்டு, கி.பி. ஆண்டு, அறச்செயல் என்ற தலைப்புகளின் கீழ் அட்டவணைப்படுத்தியிருக்கும் முறை இக்கோயில் தொடர்பான ஆய்வுகளில் முனைவோருக்குப் பெரும்பயன் தருவது உறுதி.

சமயம் பற்றிய இவரது கல்வெட்டாய்வுக் கட்டுரையில் காணப்படும் தளிப்பரிவாரம்' பற்றிய குறிப்புகள் அரிதானவை; சிறப்பானவை. ஆந்திர மாநிலக் கபோதீசுவரர் கோயிலில் காணப்படும் முதலாம் மகேந்திரவர்மரின் கல்வெட்டிலிருந்து கம்பவர்மரின் திருவொற்றியூர்க் கல்வெட்டு வரை பல மன்னர்களின் கல்வெட்டுகளை ஆராய்ந்து தளிப்பரிவாரம் பற்றிய தரவுகளைத் தொகுத்துள்ளார். தளிஆழ்வார்கள்' தளிப்பணி செய்யும் மாணிகள்' எனத் தளிப்பரிவாரம் தொடர்புடையனவாய்க்க கிடைத்த பிற சொல்லமைப்புகளையும் தம் கட்டுரையில் சுட்டி விளக்கியுள்ளமை இவரது பரந்துபட்ட கல் வெட்டறிவைப் புலப்படுத்துமாறு உள்ளது.

வரலாற்று பேரறிஞராகவும், ஆராய்ச்சி வல்லுநராகவும், சைவ சமய வரலாற்று ஆராய்ச்சியாளராகவும் விளங்கியவர் மா.இராசமாணிக்கனார். ஆய்வு அவருக்கு வாழ்க்கையாகவே அமைந்திருந்தது அன்பு, அருள் நல்லொழுக்கம் இவற்றின் மலர்ச்சியே சமய வாழ்க்கை என்றும் பிறருக்குத் தொண்டு செய்வதே சமய வாழ்வின் அடிப்படை எனக்கூறி தம் வாழ்நாள் முழுவதும் அப்படியே வாழ்ந்து காட்டிய மிகச்சிறந்த ஆய்வு ஆளுமை.

### அடிக்குறிப்புகள்

1. பத்துப்பாட்டு ஆராய்ச்சி முகவுரை பக் - *12*
2. பல்லவர் வரலாறு மா.இராசமாணிக்கனார். பக் - *25*
3. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

4. ஆய்வுக்கு உதவிய நூல்கள்
5. மா. இராசமாணிக்கனார் இரா.கலைக்கோவன்
6. பத்துபாட்டு ஆராய்ச்சி மா. இராசமாணிக்கனார். சாகித்ய அகாடமி
7. பல்லவர் வரலாறு மா.இராசமாணிக்கனார் திருநெல்வேலி தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகம்
8. பெரிய புராண ஆராய்ச்சி மா.இராசமாணிக்கனார் சுபா பதிப்பகம்.
9. சோழர்வரலாறு மா.இராசமாணிக்கனார் நாம் தமிழர் பதிப்பகம்.